# எஸ் பே செயலி
# வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்

எஸ் பே செயலிக்காக கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வரையறைகளும் நிபந்தனைகளும் பயனர் (''**பயனர்**'', இப் பதம் அதன் பொருள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு முரணாக இல்லாதவரை, அதன் வாரிசுரிமையர் மற்றும் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டவர்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்) மற்றும் எஸ் பேங்க் (''**எஸ் பேங்க்**'', இப் பதம் அதன் பொருள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு முரணாக இல்லாதவரை, அதன் வாரிசுரிமையர் மற்றும் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டவர்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்) இடையே செய்யப்பட்டிருக்கும் முழுமையான மற்றும் தனிப்பட்ட ஒப்பந்தத்திற்கானது. பயனர் என்றும் எஸ் பேங்க் என்றும் தனித்தனியாகக் குறிப்பிடுவதை ''**பார்ட்டி**'' என்றும், ஒன்றாகச் சேர்த்து குறிப்பிடுவதை ''**பார்ட்டிகள்**'' என்றும் எழுதப்படும்.

இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்கள், திருத்தங்கள் அல்லது நீக்கங்கள் எதுவும் எழுத்துப் பூர்வமாக இரண்டு பார்ட்டிகளும் முறையாக உறுதிசெய்து ஏற்றுக்கொள்ளும் வரையில் வாய்ப்பேச்சாக அல்லது வாய்மொழியாகச் செய்யப்படும் மாற்றங்கள், திருத்தங்கள் அல்லது நீக்கங்கள் எதுவும் செல்லுபடியாகாது.

எஸ் பேங்க் வழங்கியிருக்கும் இதர பிற சேவைகள் அல்லது கணக்கு சம்பந்தப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் மற்றும் / அல்லது எஸ் பேங்க் அவ்வப்போது தெரியப்படுத்தும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் கூடுதலானவையாக இருக்குமே அன்றி அவைகளுக்கு எதிரானவையாகவோ அல்லது அவற்றை மீறியதாகவோ இருக்காது.

**எ. வரையறைகள்:** கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளுக்கும் சொற்றொடர்களும் இந்த ஆவணத்தைப் பொருத்த வரையில் சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு முரணாகாதவாறு அவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொருள்களில் புரிந்துகொள்ளப்படும்:

1. ''**செயலி**'' என்பது ''எஸ் பே செயலியை'' குறிக்கும், இது எஸ் பேங்கின் மொபைல்/ஃபேஸ்புக் செயலி போன்றதாக இருக்கும், இதை ஃபேஸ்புக் மூலம் அணுக இயலும் அல்லது ஐஓஎஸ் ஆப் ஸ்டோர் அல்லது அண்ட்ராய்டு மொபைல் ஆபரேடிங் சிஸ்டம் அல்லது விண்டோஸ் ஆப் ஸ்டோர் மூலமாக பதிவிறக்கம் செய்துகொண்டு எஸ் பே மூலாமாக எஸ் பேங்க் வழங்கிக் கொண்டிருக்கும் சேவைகள் மற்றும் புராடெக்டுகளைப் பயன்படுத்த முடியும்.
2. ''வாலெட்'' எனும் வார்த்தை பயனருக்கு எஸ் வங்கி வழங்கிக் கொண்டிருக்கும் முன்னதாக தொகை செலுத்தப்பட்ட ஆவணங்களைக் (''பிபிஐ'') குறிக்கும்.
3. ''பார்ட்னர் வாலெட்'' எனும் சொற்றொடர் எஸ் பேங்க்-ன் பார்ட்னர்கள் பலர் பயனருக்கு வழங்கும் முன்னதாக தொகை செலுத்தப்பட்ட ஆவணங்களைக் (''பிபிஐ'') குறிக்கும்.
4. ''**கணக்கு(கள்)**'' எனும் வார்த்தை எஸ் பேங்கில் பயனரின் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வங்கிக் கணக்கை அல்லது எஸ் பேங்க் வழங்கும் சேவை ஒன்றைப் பெற எஸ் பேங்கிற்கு பயனர் தெரியப்படுத்தியிருக்கும் வங்கிக் கணக்கைக் குறிக்கும்.
5. ''**கணக்குதாரர்**'' எனும் வார்த்தை வெளி நாட்டில் வாழும் இந்தியரின் கணக்கு, நடப்பு கணக்கு, கார்பொரேட் கணக்குதாரர்கள் மற்றும் அயல்நாட்டில் கணக்கு வைத்திருப்பவர்களைத் தவிர்த்து எஸ் பேங்கில் அல்லது வேறு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் பயனரைக் குறிக்கும்.
6. ''**இரகசிய விபரங்கள்**'' எனும் சொற்றொடர் பயனர், அவருடைய சொந்த அல்லது வர்த்தகம் தொடர்பான செய்திகள் அது டெக்னிகல், வணிகம் அல்லது நிதியியல் வகை சார்ந்ததாக இருந்தாலும் எஸ் பேங்கிற்கு வாய் மொழிச் செய்தியாக, காட்சியாக அல்லது எழுத்து மூலமாக

நம்பத் தகுந்ததாக அல்லது தெளிவற்றதாக இருந்தாலும், எஸ் பேங்குடன் சம்பந்தப்பட்ட சேவைகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும், ''இரகசியம்'' என்று குறிப்பிடப் பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அல்லது அது இரகசியமாகக் கருதப்பட ஏதுவானதாக இருந்தாலும் இவை அனைத்தையும் குறிக்கும். இரகசியச் செய்தி என்பதில் இவை அடங்காது. பொதுவாகக் கிடைக்கும் அல்லது மாற்றளிப்பு ஆவணம் நிறைவேற்றப்படாததற்கு முன்னர் பொதுவாகக் கிடைக்கும் செய்திகள், இரகசியம் என்று கருதப்படும் ஒரு செய்தி சொல்லப்படுவதற்கு முன்னதாகவே சொல்லப்படுபவருக்குத் தெரிந்திருக்கும் செய்திகள், அல்லது மற்றவர் தெரிவித்திருக்கும் செய்தியின் அடிப்படையில் அல்லது மற்றவரிடமிருந்து தெரிந்து கொண்டிருப்பதைப் பயன்படுத்தாமல் ஒருவர் சொந்தமாகவே தெரிந்து கொண்டிருக்கும் விபரங்கள்.

7. ''**வசதிகள்**'' எனும் வார்த்தை எஸ் பேங்க் அவ்வப்போது செயலி மூலம் வழங்கும் வசதிகளைக் குறிக்கும்.

8. பணப்பட்டுவாடா மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம், 2007 விதிமுறைகளின் படி அமைக்கப்பட்ட ''என்சிபிஐ'' எனப்படும் இந்திய தேசிய பணப்பட்டுவாடா ஆணையம் இந்தியாவில் ஒரு பலமான பணப்பட்டுவாடா மற்றும் தீர்வுகள் அகக்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.

9. ''**வரம்புகள்**'' எனும் வார்த்தை இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது வரையறுத்து தெரிவிப்பது போல் பயனரால் இந்திய ரூபாய் மதிப்பில் பிறருக்கு வழங்கப்பெறும் ஆவணங்களின் மொத்த மதிப்பு என்பதைக் குறிக்கும்.

10. ''**மொபைல் நம்பர்**'' எனும் வார்த்தை பயனர் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டிருக்கும் தொலைபேசி எண்ணைக் குறிக்கும்.

11. ''**மொபைல் போன்**'' எனும் வார்த்தை பயனர் பயன்படுத்தும் அல்லது அவருக்குச் சொந்தமான ஸ்மார்ட் போன் மற்றும் அதில் பொருத்தப்பட்டு பயன்பாட்டிலிருக்கும் சிம் கார்டை அவற்றைப் பயன்படுத்தி எஸ் பேங்கிலிருந்து வசதிகளைப் பெறுவதைக் குறிக்கும்.

12. ''**சொந்த தகவல்**'' எனும் சொற்றொடர் பயனரைக் குறித்து எஸ் பேங்கிற்கு பயனர் அளித்தவை மற்றும்/ அல்லது எஸ் பேங்க் பயனருக்கு வழங்கியிருக்கும் அல்லது வழங்கவிருக்கும் வசதிகள் தொடர்பாக வங்கி தானாகப் பெற்றிருப்பதைக் குறிக்கும்.

13. ''பிபிஐ'' எனும் வார்த்தை 11 அக்டோபர், 2017 தேதியிட்ட முன்செலுத்திய பணப்பட்டுவாடா ஆவணங்கள் வெளியிடுதல் மற்றும் இயக்கம் குறித்த முக்கிய வழிநடத்தல் குறிப்புகளைத் தொடர்ந்து, அவ்வப்போது அவை திருத்தப்பட்டது உள்ளிட்டு, இந்த ஆவணங்களில் முன்னதாக தொகை ஏற்றப்பட்டதைப் பயன்படுத்தி அதற்கு எதிராக நிதியியல் சேவைகள், பணம் அனுப்புதல் வசதிகள் ஆகியவை உள்ளிட்டு, பொருள்கள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்ய கிடைக்கும் வசதிகளைக் குறிக்கும்.

14. ''**நடவடிக்கை**'' எனும் வார்த்தை பணம் அனுப்பும் சேவை அல்லது வர்த்தகர்களுடைய இணையதளங்கள் மூலம் பற்பல பொருள்கள் மற்றும் சேவைகளைப் பணம் செலுத்தி பெறுதல் அல்லது எஸ் பேங்க் மூலமாக அவ்வப்போது செயலி மூலமாக வங்கி வழங்கும் இதர பிற சேவைகளைப் பெறுதலைக் குறிக்கும்;

15. ''**பயனர்**'' எனும் வார்த்தை எஸ் பேங்கின் கணக்குதாரர் மற்றும் வேறு ஒருவர் (எஸ் பேங்கின் பழைய வாடிக்கையாளர் அல்லது எஸ் பேங்குடன் ஏதாவது வர்த்தகத் தொடர்பு வைத்திருப்பவர்) செயலிக்காகப் பதிவு செய்துகொண்டு வங்கி, வழங்கும் சேவைகளைப் பெறும் தகுதியுடைய ஒருவரையும் குறிக்கும்.

16. ''யுபிஐ'' என்றும் வார்த்தை ஒரு மொபைல் கருவி மூலமாக உடனடியாக நிகழ்நேரத்தில் பணத் தொகையை கணக்கில் அனுப்பி வைக்கும் வசதி / இந்திய தேசிய பணப்பட்டுவாடா ஆணையம் உருவாக்கியுள்ள பணப்பட்டுவாடா செயலியைக் குறிக்கும், இது ஒரு குடையின் கீழ் சில்லறை வியாபாரத்தில் பணம் செலுத்தும் மற்றும் தீர்வு முறைகளுக்கான அமைப்பாகச் செயல்படும், இது பணப்பட்டுவாடா மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம், 2007 விதிமுறைகளின் படி இந்திய தேசிய பணப்பட்டுவாடா ஆணையத்தின் கீழ் இந்தியாவில் ஒரு பலமான பணப்பட்டுவாடா மற்றும் தீர்வுகள் அகக்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.
17. ''விபிஏ'' என்பது யுபிஐ-ன் ஒரு பகுதியாக வழங்கப்பட்டிருக்கும் வர்சுவல் பேமென்ட் அட்ரஸ் என்று பொருள்படும்.
18. ''வர்சுவல் கார்டு'' என்பது செயலியில் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி எஸ் பேங்க் வழங்கியிருக்கும் வர்சுவல் கார்டைக் குறைக்கும்.
19. ''கிரடிட் கார்டு'' என்பது எஸ் பேங்க் இணையதளத்தில் எழுதப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட கிரடிட் கார்டுகளைக் குறிக்கும்.
20. ''டிராவல் கார்டு'' என்பது எஸ் பேங்க் இணையதளத்தில் எழுதப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு எஸ் பேங்க் வழங்கியிருக்கும் மல்ட்டி கரன்சி முன்செலுத்தப்பட்ட ஆவணமாக எஸ் பேங்க் வழங்கியிருக்கும் கார்டுகளைக் குறிக்கும்.
21. ''சேமிக்கப்பட்ட கார்டு'' எனும் வார்த்தை எஸ் பே-யில் டெபிட்/கிரிடிட் கார்டு விபரங்களை பயனர் சேமித்து வைத்திருப்பதைக் குறிக்கும்.
22. ''ஆட்டோ-ரீஃபில்'' எனும் வார்த்தைக்கு வாலெட்டில் மறுபடியும் தானாக பண மதிப்பைக் கூட்டுவதைக் குறிக்கும்.

**பி. தகுதியுடைமை மற்றும் பயன்பாடு:**

1. இந்தியாவில் வசிக்கும் பயனர்கள் அனைவருக்கும் இந்த வசதிகள் கிடைக்கும் என்றாலும் பயனர்களிடம் முறையான மொபைல் நம்பர் ஒன்று இந்திய எல்லைக்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு டெலிகாம் நிறுவனத்துடன் பதிவு செய்து கொண்ட மொபைல் நம்பர் ஒன்று இருக்க வேண்டும், அதில் தேவைப்படும் அத்தாட்சி சான்றுகளை உறுதி செய்யும் வசதியும் இருக்க வேண்டும், அத்துடன் வங்கி வழங்கும் வசதிகளைப் பெற சொந்தமாகப் பயன்படுத்தப்படும் பாஸ்கோடு ஒன்றை நிறுவும் வசதியும், இன்னும் பல வசதிகளும் இருக்கலாம், இருக்க வேண்டும்.
2. எஸ் பேங்க்-ன் சொந்த விருப்பத்தின் பேரில் மற்றும் இதில் கொடுக்கப்பட்டிருக்கும் தகுதியுடைமை கூறளவுகளுக்கு உட்பட்டு பொருந்தும் பயனருக்கு மட்டுமே இந்த வசதிகள் வழங்கப்படும். பயனருக்கு முன்னறிவிப்பு செய்து அல்லது முன்னறிவிப்பு செய்யாமல் எந்த நேரத்திலும் எஸ் பேங்க் இந்த வசதிகளை நிறுத்திக்கொள்ள முடியும் என்பதை பயனர் ஏற்று அதற்குச் சம்மதிக்கிறார்.

**சி. அதிகாரமளித்தல்:**

1. பயனர் அவர் செயலியை எஸ் பேங்கிடம் பதிவு செய்து உறுதி செய்துகொண்டபோது அல்லது எஸ் பேங்கிலிருந்து வசதிகளைப் பெற நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அளித்திருக்கும் பயனர் கணக்கு(கள்) மற்றும் சொந்த தகவல்களை எஸ் பேங்க் எந்த நேரத்திலும் அணுக மாற்றவியலாத மற்றும் நிபந்தனைகள் இல்லாத அனுமதியை எஸ் பேங்கிற்கு பயனர் அதிகாரமளிக்கிறார்.

2. சேவை அளிக்கும் ஒருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு தன்னிடமிருக்கும் பயனர் விபரங்களை எந்த வித அறிவிப்பும் இல்லாமல் (அது வாய் மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ) அல்லது பயனரிடமிருந்து ஒப்புதல் எதைபும் பெறாமல் எஸ் பேங்க் அளிக்க மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற அதிகாரத்தை பயனர் மிகத் தெளிவாக எஸ் பேங்கிற்கு வழங்குகிறார்.

3. எஸ் பேங்க் தன் சுய விருப்பத்தைச் சார்ந்து முடிவு செய்யும் காலவரை வரை பயனர் விபரங்கள் மற்றும் நடவடிக்கை விபரங்களைப் பாதுகாத்து வைத்துக்கொள்வதை மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற அதிகாரத்தை பயனர் எஸ் பேங்கிற்கு வழங்குகிறார்.

4. எஸ் பேங்க் மற்றும்/அல்லது அதன் முகவர்கள் / பிரதிநிதிகள் பயனரின் மொபைல் நம்பருக்கு செய்திகள் அனுப்ப அல்லது மொபைல் நம்பரில் தொடர்புகொண்டு பயனரிடம் அறிமுகம் செய்யப்படும் சலுகைகள் குறித்த விபரங்களைத் தெரிவிக்க, அவை தற்போது நடப்பிலுள்ள புராடெக்டுகள் குறித்தவையாகவும் இருக்கலாம், அல்லது அறிமுகப்படுத்தப்படும் ஏதாவது புதிய புராடெக்டுகள் குறித்தவையாக இருக்கலாம், அல்லது எஸ் பேங்க் புத்தம் புதிதாக அறிமுகம் செய்யும் புராடெக்ட் ஒன்றாகவும் இருக்கலாம் மற்றும் அவ்வப்போது அல்லது வாழ்த்துக்கள் மற்றும் பயனர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எஸ் பேங்க் கருதும் பேனர்கள் அல்லது விளம்பரச் செய்திகளை எஸ் பேங்க் தனக்குத் தெரிவிக்கலாம் என்று மாற்றவியலாத மற்றும் நிபந்தனையற்ற அதிகாரத்தை மிகத் தெளிவாக பயனர் எஸ் பேங்கிற்கு வழங்குகிறார்.

5. எஸ் பேங்க் வழங்கியுள்ள வசதிகளுக்குப் பொருத்தமற்றவை என்று எஸ் பேங்க் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் கருதும் ஒரு நடவடிக்கையை அல்லது நடவடிக்கைக்கான கோரிக்கையை எஸ் பேங்க் நிராகரிக்க முடியும் என்றும் அல்லது நிராகரிப்பு செய்தியை பயனருக்கு எஸ் பேங்க் தெரிவிக்கலாம் என்று எஸ் பேங்கிற்கு மாற்றவியலாத மற்றும் நிபந்தனையற்ற அதிகாரத்தை மிகத் தெளிவாக பயனர் வழங்குகிறார். எஸ் பேங்க் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் செல்லத்தக்கவையாகவும், பயனரைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

6. எஸ் பேங்க் வழங்கியிருக்கும் அல்லது வழங்கவிருக்கும் வசதிகளுக்காக எஸ் பேங்கிலிருக்கும் தன் கணக்கு(கள்) அல்லது வேறு வங்கியிலிருக்கும் பயனர் கணக்குகளில் பற்று வைக்கும் மாற்றவியலாத மற்றும் நிபந்தனையற்ற அதிகாரத்தை மிகத் தெளிவாக பயனர் எஸ் பேங்கிற்கு வழங்குகிறார்.

7. ஒரு வேளை சேமிக்கபட்ட கார்டு வசதியை பயனர் விரும்பும் பட்சத்தில் கார்டு விபரங்களை பாதுகாக்க/சேமித்து வைத்துக்கொள்ளும் அதிகாரத்தை நிபந்தனைகள் எதுவுமில்லாமல் பயனர் எஸ் பேங்கிற்கு வழங்குகிறார்.

8. பயனர் தன் செயலியில் ஆட்டோ-ரீஃபில் வசதியைத் தேர்வு செய்திருந்தால், சேமிக்கப்பட்ட கார்டில் பற்று வைத்து வாலெட்டில் வரவு வைக்க நிபந்தனைகளில்லாத அதிகாரத்தை பயனர் எஸ் பேங்கிற்கு வழங்குகிறார்.

9. என்பிசிஐ வழங்கியுள்ள பொருந்தும் வழிநடத்தல் குறிப்புகளுக்கேற்ப, யுபிஐ பதிவு முறையின் ஒரு பகுதியாக பயனரின் மொபைல் நம்பரிலிருந்து வெளிச்செல்லும் எஸ்எம்எஸ் செய்தி ஒன்றை அனுப்ப எஸ் பேங்கிற்கு பயனர் மாற்றவியலாத மற்றும் நிபந்தனைகளற்ற அதிகாரத்தை வழங்குகிறார்.

**டி. பயனர் சுட்டிக்காட்டுதலும் உறுதியளித்தலும்:**

1. ஒரு ஃபேஸ்புக் கணக்கு, மொபைல் போன், டேட்டா கனெக்ஷன் ஆகியவை வங்கி வழங்கும் வசதிகள் பெற ஆனால் அதற்காகவே மட்டுமல்லாமல், ஒரு முன் தேவையாக இருக்கும்

என்பதையும் அவை பயனரின் சொந்த விருப்பு மற்றும் பொறுப்பாக இருக்கும் என்பதையும் பயனர் புரிந்து கொள்கிறார், அதற்குச் சம்மதமளித்து உறுதி செய்கிறார்.

2. பயனர் நடத்தும் நடவடிக்கைகள் அல்லது பெறும் வங்கி வசதிகள் குறித்து எஸ் பேங்க் பராமரிக்கும் மற்றும் பாதுகாத்து வைத்திருக்கும் தரவுகள், தகவல்கள் அனைத்தும் இறுதியானவை மற்றும் உண்மையானவை என்றும் அவை துல்லியமான நடவடிக்கைகளுக்குச் சான்றாக விளங்கும் என்பதை பயனர் ஏற்றுக்கொண்டு அதை உறுதி செய்கிறார்.

3. எஸ் பேங்க் பராமரித்து பாதுகாத்து வைத்திருக்கும் அனைத்து வகையான பதிவுகள், தரவுகள் மற்றும் பெறப்படும் விபரங்கள் அனைத்தும் பொருத்தமானவை, இறுதியானவை மற்றும் பயனரைக் கட்டுப்படுத்துபவை என்றும் அதன் மீது கேட்புரிமை, சர்ச்சை அல்லது பிரச்சினை எதுவும் பயனரால் எழுப்பப்படாது என்பதை பயனர் ஏற்று சம்மதித்து உறுதியளிக்கிறார்.

4. எஸ் பேங்க் மற்றும் / அல்லது அதன் முகவர்கள் / பிரதிநிதிகள் அனுப்பி வைக்கும் அல்லது செய்யும் அழைப்புகளை அவருடைய அந்தரங்கத்திற்கு பங்கம் விளைவிப்பதாக பயனர் கருதமாட்டார் என்றும் எஸ் பேங்க் மற்றும் / அல்லது அதன் முகவர்கள்/பிரதிநிதிகளை இதற்கு பொறுப்பாக்கமாட்டார் என்று மாற்றவியலாதவாறு மற்றும் நிபந்தனையற்று எஸ் பேங்கிற்கு பயனர் தன் சம்மதத்தைத் தெரிவிக்கிறார்.

5. பயனர் அனுப்பும் அனைத்து கோரிக்கை(கள்) அல்லது நடவடிக்கை(களை) மற்றும் செயலி மூலமாக அவர் செய்துகொள்ளும் கோரிக்கைகளை எஸ் பேங்க் பரிசீலித்து நிறைவேற்றும் என்றாலும் பயனரிடமிருந்து வரும் இது போன்ற கோரிக்கைகள் அல்லது நடவடிக்கைகள் உண்மையானவையா இல்லையா என்று பரிசோதிக்கும் பொறுப்பு எஸ் பேங்கிற்கு இருக்காது என்பதற்கு மாற்றவியலாதவாறு மற்றும் நிபந்தனையற்று மிகத் தெளிவாக பயனர் எஸ் பேங்குடன் உடன்பட்டு உறுதி செய்கிறார்.

6. எஸ் பேங்க் இந்த வசதிகள் மூலமாக அவ்வப்போது புதிய சேவைகளை அறிமுகம் செய்ய முடியும் என்றும், இது போன்ற புதிய சேவைகளைப் பெற பயனரை எஸ் பேங்க் பதிவு செய்துகொள்ள பயனர் எஸ் பேங்கிற்கு தெளிவாக அதிகாரம் வழங்கியுள்ளார் என்று கருதப்படுவார்.

7. இந்திய ரிசர்வ் வங்கி (‘‘ஆர்பிஐ’’) அவ்வப்போது விதிக்கும் ஆன்டி-மணி லாண்டரிங் (ஏஎம்எல்) விதிமுறைகளுக்கு இணங்கி பயனர் தன் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

8. ஒருவேளை பயனர் எஸ் பேங்கிற்கு அளித்திருக்கும் தகவல்களில் ஏதேனும் தவறு இருப்பதாக அவருக்குச் சந்தேகம் தோன்றினால், தாமதம் செய்யாமல் பயனர் அத் தவறை திருத்தி அல்லது குறைபாடுகளை நிவர்த்தி செய்து எழுத்துபூர்வமாக எஸ் பேங்கிற்குத் தெரிவிக்க வேண்டும். பயனரிடமிருந்து குறைபாடுகளைத் திருத்த வேண்டிய விசயங்கள் கிடைத்ததும், முடிந்த வரையில் அத் தவறுகளைச் சரிசெய்ய வேண்டிய ஏற்பாடுகளை விரைந்து மேற்கொள்ளும்.

9. எஸ் பேங்குடன் பதிவு செய்துகொண்டிருக்கும் பயனர் மொபைல் போனில் அல்லது மொபைல் நம்பரிலிருந்து செய்யப்படும் நடவடிக்கைகளை பயனரின் பரிபூரண ஒப்புதலுடன், பயனர் விரும்பியவாறு பயனரால் செய்யப்படும் நடவடிக்கைகள் என்று எஸ் பேங்க் கருதுவதை பயனர் ஏற்றுக்கொள்கிறார்.

10. ஒருவேளை பயனரால் அனுமதிக்கப்படாத நடவடிக்கை ஏதேனும் பயனர் கணக்கில் நிகழ்ந்திருந்தால் தாமதிக்காமல் பயனர் அதன் விபரங்களை எஸ் பேங்கிற்குத் தெரியப்படுத்த கடமைப்பட்டுள்ளார்.

11. எஸ் பேங்க் அளித்திருக்கும் வசதிகளை பயனர் பயன்படுத்தும்போது, இங்கே அடியில் கூறப்பட்டிருக்கும் அனைத்து வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை அவர் ஏற்றுக்கொள்கிறார்

என்றும் மற்றும் எஸ் பேங்க் அவ்வப்போது வகுத்துக் கொடுக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்று எழுதி கையொப்பமிட்டவைகளை மதித்து எவ்வாறு கட்டுப்பட்டிருப்பாரோ அவ்வாறே இவைகளுக்கும் கட்டுப்பட்டிருப்பார் என்று சம்மதித்து பயனர் உறுதி அளிக்கிறார்.

12. இந்த வசதிகளின் அடிப்படையில் வழங்கப்படும் அனைத்து நோக்கங்களுக்கும் பயனர் அவசியப்படும் அனைத்து முன்னெச்சரிக்கைகளுடன் நடந்து கொண்டு அங்கீகரிக்கப்படாத மற்றும் சட்டவிரோதமான பயன்பாட்டிற்கு இந்த வசதிகள் பயன்படாமமல் தடுத்துக் கொள்வார்.

13. பாஸ்கோடு/ஓடிபி/கோடு/பாஸ்வெர்டு அனைத்தின் இரகசியத்தன்மைக்கு பயனர் பொறுப்பேற்று நடந்து கொள்வதுடன் இந்த பாஸ்கோடு/ஓடிபி/கோடு/பாஸ்வெர்டு ஆகியவைகளில் தவறான பயன்பாட்டினால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் அவர் பொறுப்பேற்றுக்கொள்வார்.

14. இந்த வசதிகளை பயனர் பயன்படுத்தும் காலத்தில் சட்ட விரோதமான, கெடுதலான, அச்சம் ஏற்படுத்தும், பழி தூற்றும், ஆபாசமான, தொல்லைப்படுத்தும், களங்கம் கற்பிக்கும், கொச்சையான, பாலியல் சம்பந்தப்பட்ட, அவமரியாதை போன்ற, கேவலமான, வெறுப்பு உணர்ச்சிகளைத் தூண்டும், அவதூறு கற்பிக்கும், பொல்லாங்கு, வெறுப்பூட்டும், இனவெறி தூண்டும், ஒரு குறிப்பிட்ட இனத்தாறை வெறுக்கும், சமூக கேடு விளைவிக்கும், அரசியல் ரீதியான, சட்ட ரீதியான, நெறிக்குப் புறம்பான, சமயத்திற்குப் புறம்பான அல்லது வெறுக்கத்தக்க அல்லது மற்றொருவருடைய உரிமையில் தலையிடுவது போன்ற அல்லது பிரபலமானவர்களின் உரிமைகள் அல்லது அவர்கள் அந்தரங்கம் அல்லது அவர்கள் நுண்ணறிவைப் பழிப்பது போன்ற எதையும் செய்யக்கூடாது.

15. அனைத்து நடவடிக்கைகளின் பதிவுகளை எஸ் பேங்க் விரும்புவதுபோல் எந்த படிவத்திலும் அல்லது வழி முறைகளிலும் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளலாம் என்பதை பயனர் ஏற்று உறுதிப்படுத்தி அதற்குச் சம்மதம் அளிக்கிறார். ஏதாவது பிரச்சினை எழுந்தால், இந்த செயலி மூலமாக நடந்ததற்கான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட எஸ் பேங்கின் பதிவுகள் இறுதி சான்றாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

16. எஸ் பேங்க் அங்கீகரித்திருக்கும் வழிமுறைகளைத் தவிர்த்து வேறு எதற்கும் இந்த வசதிகளை பயனர் பயன்படுத்த மாட்டார். ஒருவேளை பயனர் இந்த வசதியை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தினால் அல்லது அந்த நோக்கங்கள் சட்ட விரோதமானவையாக, பொருந்தாததாக அல்லது இந்த அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் புறம்பாக இருந்தால், பயனர் அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிற்கு இந்த வசதியைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்த எஸ் பேங்க் நியாய பூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உரிமை பெற்றிருக்கும்.

17. இந்த வசதி அவ்வப்போது பராமரிக்கப்பட வேண்டும் என்பதால், அச்சமயத்தில் பயனர்களிடமிருந்து வரும் நடவடிக்கை கோரிக்கைகளைப் பரிசீலிக்க முடியாமல் போகும் என்பதை பயனர் ஏற்று அதை உறுதி செய்கிறார்.

18. பயனருக்கு எஸ் பேங்க் வழங்கியிருக்கும் அல்லது வழங்கவிருக்கும் இந்த வசதியைப் பயன்படுத்த முன் நிபந்தனையாக எஸ் பேங்கிற்கு பயனர் வழங்கியிருக்கும் விபரங்களின் துல்லியத்தன்மைக்கு பயனர் முழு பொறுப்புகளை ஏற்றுக்கொள்கிறார்.

இ. பயனரின் பொறுப்புகள்:

1. எஸ் பேங்கிற்கு பயனர் சமர்ப்பித்திருக்கும் அனைத்து சரியான விவரங்கள் அல்லது விவரங்களின் அல்லது வழங்கும் விவரத்தின் துல்லியத்தன்மைக்கு பயனர் மட்டுமே முழுமையாகப் பொறுப்பேற்கிறார்.
2. இந்த வசதி மூலமாக சரியான நபருக்கு அல்லது பணம் செலுத்த வேண்டிய நபருக்கு பயனர் மேற்கொள்ளும் அனைத்து தொகை மாற்ற நடவடிக்கைகளுக்கு அல்லது எஸ் பேங்கின் சேவை அளிப்பவர்கள் / வியாபாரிகள் மூலமாகச் செய்யப்படும் பயனர் நடவடிக்கைகள் அனைத்திற்கும் பயனர் மட்டுமே முழுமையாகப் பொறுப்பேற்கிறார்.
3. இந்த செயலி மூலம் வழங்கப்படும் வசதிகளுக்காக பயனர் எஸ் பேங்கிற்கு வழங்கியிருக்கும் விவரங்களில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது தவறுகள் இருக்கும் பட்சத்தில் அதற்கு பயனர் மட்டுமே முழுமையாகப் பொறுப்பேற்கிறார்.
4. எஸ் பேங்க் வழங்கும் அல்லது வழங்கவிருக்கும் வசதிகளுக்குத் தேவைப்படும் மொபைல் போன், மொபைல் நம்பர் மற்றும் பாஸ்கோடு ஆகியவைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு பயனர் மட்டுமே முழுமையாகப் பொறுப்பேற்கிறார்.
5. எஸ் பேங்கிற்கு வழங்கப்பட்டிருக்கும் மோசடியான அல்லது தவறான குறிப்புகள் அல்லது கோரிக்கைகளுக்கு அல்லது அங்கீகரிக்கப்படாத அல்லது சட்ட விரோதமான பாஸ்கோடு/ பாஸ்வொர்டுகள் அல்லது வசதிகள் பயன்பாட்டிற்கு பயனர் மட்டுமே முழுமையாகப் பொறுப்பேற்கிறார்.
6. பயனரின் தரப்பிலிருந்து செய்யப்படும் நடவடிக்கைகள் அல்லது விடுபட்டுப் போனவை காரணமாக எஸ் பேங்கிற்கு விளையும் அனைத்து அல்லது குறிப்பிட்ட இழப்புகளுக்கு பயனர் மட்டுமே முழுமையாகப் பொறுப்பேற்கிறார், அத்துடன் அங்கீகரிக்கப்படாத பயன்பாடு / அவர் சார்பாக வசதி பயன்படுத்தப் பெறுதல் அல்லது ஓடிபி/பாஸ்கோடு / பாஸ்வொர்டு அல்லது வசதி சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைப்புகளில் இடைவழி நிகழ்தல் ஒருவேளை பயனருக்குத் தெரிந்திருந்தால் அல்லது உண்மையாகத் தெரிய வந்தால் தாமதமின்றி அதை எஸ் பேங்கிற்குத் தெரியப்படுத்தும் முழு பொறுப்பையும் பயனர் ஏற்றுக்கொள்கிறார்.
7. ஒருவேளை பயனரின் மொபைல் நம்பரில் மாற்றம் அல்லது மொபைல் கருவி காணாமல் போதல் அல்லது பயனரின் மொபைல் போன் வேறொருவருக்கு அல்லது ஒரு மூன்றாம் நபர் பயன்பாட்டில் இருத்தல் ஆகிய சமயங்கள் உட்பட பயனருக்கு வழங்கப்பட்டிருக்கும் வசதிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் கோரிக்கைகளை எஸ் பேங்கிற்கு பயனர் செய்ய அதற்கான முழு பொறுப்பையும் பயனர் ஏற்றுக்கொள்கிறார்.
8. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை, எஸ் பேங்க் அவ்வப்போது செய்யும் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் உள்ளிட்டவையுடன், பயனர் ஒருவேளை பங்கப்படுத்துவதால் எஸ் பேங்கிற்கு விளையும் *(உண்மையாக விளைந்தவை அல்லது விளைய இருப்பவை)* அனைத்திற்கும் மாற்றவியலாத வகையில் மற்றும் நிபந்தனைகளற்று பயனர் பொறுப்பேற்க வேண்டும்.
9. எஸ் பேங்க் வழங்கும் வசதிகளை பயனர் அவர் சொந்த பொறுப்பு மற்றும் அனைத்து விளைவுகளுக்கும் பொறுப்பேற்று பயன்படுத்துவார், இவ் வகையில் கீழ்க்கண்டவையும் அடங்கும்: (1) எஸ் பேங்கின் கட்டுப்பாடுகளுக்கு வெளியிலிருக்கும் டெக்னிகல் தடங்கல், செயலிழப்பு, எந்திரக் குறைபாடு, நெட்வொர்க் செயல்படாமை, சட்டரீதியான வரம்புகள் மற்றும் இதர பிற காரணங்களால் தடங்கல்கள்; (2) பயனர் வழங்கியிருக்கும் செய்திகளில் ஒன்று தவறு /பிசகு/ முழுமையற்று இருத்தல்; (3) இதன் செயல்படுதலில் ஈடுபட்டிருக்கும் சேவை

அளிப்பவர் / மூன்றாம் நபர் / அமைப்பு வழங்கும் சேவை; (4) தாமதமாக போய்ச் சேரும் தொகை காரணமாக எழும் தவறுகள், குறைபாடுகள், சேவை வழங்க இயலாமை அல்லது சேவை வழங்குவதில் தடங்கல்; மற்றும் (5) டிரான்ஸ்மிஷன் டெலிவரியில் அல்லது டெலிவரி இயலாத ஆன்லைன் / எலக்டிரானிக் குறிப்புகள் அல்லது டிரான்ஸ்மிஷனில் அல்லது அது செய்யப்படும் டெலிவரியில் நிகழும் தவறு, விடுபடுதல் அல்லது குறைகள் அல்லது எஸ் பேங்கின் கட்டுப்பாடிற்கு வெளியிலிருக்கும் செய்திகளின் மறையீடு நீக்குதலில் நிகழும் தவறு அல்லது டிரான்ஸ்மிஷன் குறைகள்.

**எஃப். எஸ் பேங்க் பொறுப்புகளில் சேராதவை:**

1. பயனர் மற்றும் மெர்சன்ட் ஆபரேட்டர்கள் / சேவை அளிப்பவர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எதுவானாலும், இங்கே எழுத்துபூர்வமாக சொல்லப்பட்டவை தவிர்த்து எஸ் பேங்க் வேறு எதற்கும் பொறுப்பேற்காது என்பதை பயனர் புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டு உறுதி அளிக்கிறார்.
2. பயனரின் விபரங்களை இரகசியமாக வைத்துக்கொள்ள எஸ் பேங்க் பொருத்தமான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும். ஆயினும் ஒருவேளை அந்த விசயங்கள் எப்படியோ, தவறுதலாக எஸ் பேங்க் மற்றும்/அல்லது அதன் பணியாளர்கள் அல்லது முகவர்கள் அல்லது பிரதிநிதிகளிடமிருந்து கசிந்து வெளிப்பட்டுவிடும் பட்சத்தில் எஸ் பேங்க் எவ்வகையிலும் எதற்கும் பொறுப்பேற்காது.
3. இந்த வசதியின் பயன்பாடு தொடர்பாக பயனர் அழைத்திருக்கும் மூன்றாம் நபர் அல்லது நபர்கள் யாருக்கும், அது போன்ற நபர் அல்லது நபர்கள் இந்த வசதியில் பதிவு செய்துகொண்ட பயனர் அல்லது பயனர்களாக இருப்பவர்களை விடுத்து வேறு யாருக்கும் எப்பொழுதும் எஸ் பேங்க் பொறுப்பேற்காது அல்லது பொறுப்பாகாது.
4. செயலியின் வழியாக பயனருக்கு எஸ் பேங்க் வழங்கும் வசதி வைரஸ் அல்லது வேறு மோசமான, தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது செயலியை தவறுபுரிய வைக்கும் மோசடி மென்பொருள் காரணமாகப் பாதிப்படையக் கூடும் என்பதற்கும், அத்துடன் எஸ் பேங்க் இது சம்பந்தமாக எவ்வகையிலும் எதற்கும் பொறுப்பேற்காது என்பதை பயனர் புரிந்துகொண்டு அதற்குச் சம்மதிக்கிறார்,
5. எஸ் பேங்க் வழங்கும் வசதியை அது பராமரிக்கும் சமயத்தில் பயனரின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதில் நிகழும் தாமதங்கள் அல்லது கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாமல் விடுபடுதல் ஆகியவைகளுக்கு எஸ் பேங்க் ஒருபோதும் பொறுப்பாகாது.
6. எந்த ஒரு காரணத்திற்காகவும் பயனரின் கோரிக்கையை எஸ் பேங்க் நிறைவேற்றாமல் போக நேர்ந்தால் அதனால் நேரடியாக அல்லது மறைமுகமாக விளையும் எந்த இழப்புகளுக்கும் எஸ் பேங்க் நிறைவேற்ற இயலாததற்கும் பொறுப்பு எதையும் எஸ் பேங்க் ஏற்காது.
7. இந்த வசதியைப் பயன்படுத்துவது தொடர்பாக பயனரின் இரகசியப் பாதுகாப்பிலுள்ள விபரங்களில் ஏதேனும் கசிவுகள் நிகழ்ந்துவிட்டால் அதற்கு எஸ் பேங்க் பொறுப்பாகாது அல்லது பொறுப்பு எதையும் ஏற்காது.
8. கீழே கொடுக்கப்பட்டிருப்பவை சார்ந்த பொறுப்புகளை எஸ் பேங்க் ஒருபோதும் ஏற்காது என்பதற்கு பயனர் சம்மதிக்கிறார்: (1) பயனர் கொடுத்திருக்கும் குறிப்புகளை நல்லெண்ணத்துடன் பின்பற்றி எஸ் பேங்க் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும்; (2) பயனர் கொடுத்திருக்கும் குறிப்புகள் உண்மையானவை அல்ல அல்லது தெளிவாக இல்லை, பொருத்தமானதாக இல்லை, சந்தேகப்படும்படியாக அல்லது சந்தேகம் ஏற்படுத்தும் விதத்தில் அல்லது சட்டத்திற்குப் புறம்பானதாக இருப்பதாக எஸ் பேங்க் தன் சொந்த

மதிப்பீட்டில் கருதும் போது அந்த குறிப்புகளை நிறைவேற்றாமல் இருப்பது; (3) எஸ் பேங்கின் கட்டுப்பாட்டுகளுக்குப் புறம்பாக இருக்கும் காரணத்தால் தாமதமாகச் செய்யப்பட்ட பண மதிப்பு மாற்றம் / தொகை செலுத்துதல் காரணமாக எந்த ஒரு பிழை, குறைபாடு, தவறு அல்லது சேவை குறித்து புரிந்துகொள்ளுவதில் பிழை அல்லது பயனருக்கு நிகழ்ந்திருக்கும் இழப்பு அல்லது சேதம்; (4) இந்த வசதிகளை மூன்றாம் நபர் பயன்படுத்த பயனர் அனுமதித்த காரணத்தால் அந்த மூன்றாம் நபர் அங்கீகாரமில்லாமல் விபரங்களை / குறிப்புகளை அணுக இயலுதல்; (5) இந்த வசதிகளைப் பயன்படுத்தும் காலத்தில் நேரடியாக, மறைமுகமாக அல்லது அதன் காரணமாக பயனருக்கு விளைந்திருக்கும் சேதங்கள்.

9. இரகசியத்தன்மை கொண்ட அனைத்து விபரங்களும் வெளியாவதால் பயனருக்கு விளையும் அல்லது ஏற்படும் இழப்புகள், சேதங்கள், பொறுப்புகள் எதற்கும் எஸ் பேங்க் பொறுப்பாகாது என்பதை பயனர் ஏற்றுக்கொள்கிறார்.

10. பயனர் அளித்திருக்கும் விபரங்கள் துல்லியமானவை என்பதை உறுதி செய்யத் தேவைப்படும் நடவடிக்கைகளை எஸ் பேங்க் எடுத்துக்கொண்ட போதிலும் அசம்பாவிதமாக பிழை நிகழ்ந்துவிடும் பட்சத்தில் எஸ் பேங்க் அதற்குப் பொறுப்பாகாது என்றும், ஒருவேளை எஸ் பேங்க் துல்லியமற்ற விபரம் அளித்து அதனால் பயனருக்கு ஏதேனும் இழப்பு அல்லது சேதம் விளைந்திருந்தால் அல்லது விளைவதாக இருந்தால் எஸ் பேங்கை எதிர்த்து பயனர் எந்த கோரிக்கை எதையும் செய்ய மாட்டார்.

11. ஒருவேளை எஸ் பேங்க் குறைபாடுள்ள அல்லது மோசமான சேவைகள் அளித்து அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதனால் பயனருக்கு ஏதேனும் இழப்புகள் அது எவ்வகையினதாக இருந்தாலும் அதற்காக எஸ் பேங்க் ஒருபோதும் பொறுப்பாகாது.

**ஜி. சேவை வரையறைகள்:**

1. ஒரு செயலி வழியாகக் குறிப்பிட்ட கோரிக்கையைப் பயனர் செய்து கொண்டால் மட்டுமே எஸ் பேங்க் வசதிகளைச் செய்து கொடுக்கும்.

2. எஸ் பேங்க் வழங்கும் அல்லது வழங்கவிருக்கும் வசதிகளுக்கு பதிவு நடவடிக்கைகளை முறையாகச் செய்து முடிக்க அவருடைய விபரங்களை எஸ் பேங்கிற்குத் தேவைப்படுவது போல் பயனர் சமர்ப்பித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

3. எஸ் பேங்க் வழங்கும் அல்லது அவ்வப்போது வழங்கவிருக்கும் செயலியில் எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொரு அம்சங்களுக்கும் அல்லது வசதிகளுக்கும் பயனர் அவர் தம் விபரங்களை ஒவ்வொன்றிற்கும் முறையாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

4. வாலெட் வசதியைப் பெற / செயல்படுத்த ஒரு முன்நிபந்தனையாக யூஐடிஏஐ (யுனீக் ஐடெண்டிஃபிகேஷன் அத்தாரிடி ஆஃப் இந்தியா) வழங்கியுள்ள ஆதார் எண்ணை பயனர் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது எஸ் பேங்க் கணக்குதாரர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர் அடையாளத்தை (ஐடி)யை ஒன் டைம் பாஸ்வெர்டு (ஓடிபி) மூலமாக உறுதிபடுத்தப்பட வேண்டும். ஆதார் அட்டை எண் அல்லது வாடிக்கையாளர் ஐடி- முறையாக உறுதிசெய்யப்பட்ட பிறகு, மக்கள் தொகை சார்ந்த விபரங்களான பெயர், முகவரி போன்றவை ஆதார் அட்டை அல்லது வாடிக்கையாளர் ஐடி-யில் பதிவு செய்யப்பட்டவை ஆதாரத்தில் வாலெட்டுக்காகப் பதிவு செய்யப்பட ஏற்றுக்கொள்ளப்படும். பழைய வாலெட் பயனர்களைப் பொருத்த வரையில், அவர்கள் தங்கள் ஆதார் அட்டை நம்பர் அல்லது எஸ் பேங்க்-ன் வாடிக்கையாளர் ஐடி (எஸ் பேங்க் வழங்கியிருப்பது) விபரங்களை உறுதி செய்து கொண்டிருக்காவிட்டால் அல்லது உறுதி செய்யத் தவறியிருந்தால், வாலெட் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 1 (ஒரு) வருடத்திற்குள், மேற்கொண்டு பயனருக்கு எவ்வித முன்னறிவிப்பும் செய்யாமல் மற்றும் எஸ் பேங்கிற்கு எந்த பங்கமும் விளையாதவாறு அதைப் பொறுப்பாக்க

இயலாத வகையில் எஸ் பேங்க் தன் சுய விருப்பத்தின்படி வாலெட் வசதியை முடக்கி வைக்க அல்லது முடித்துக்கொள்ள எஸ் பேங்க் முழு உரிமை பெற்றிருக்கும்.

5. வாலெட் பயன்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கும் என்பதை பயனர் நிபந்தனைகள் இல்லாமல் ஏற்று அதை உறுதிப்படுத்துகிறார்: (அ) பயனர் முறையாகப் பதிவு செய்துகொண்ட பிறகு, இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அவ்வப்போது அனுமதிக்கும் கூறாநிலை வரம்புகள் அனைத்து வாலெட்டுகளுக்குப் பொருந்தும். இந்த வரம்புகள் அனைத்து பார்ட்னர் வாலெட்டுகளுக்கு இடையில் திரள் வரம்புகளாகப் பொருந்தும். (ஆ) வாலெட்டிலிருந்து பயனரின் வங்கி கணக்கிற்கு தொகை மாற்றம் செய்ய, அனைத்து வங்கி கணக்குகளையும் பயனடைபவர்களாக செயலியில் பயனர் குறிப்பிட வேண்டியிருக்கும். பயனடைபவர் தொகை மாற்றம் வரவைப் பெற குளிர்விப்பு காலம் (மணித்துளிகள்: நிமிடங்கள்) ஒன்றை எஸ் பேங்க் நிர்ணயித்து அதற்குப் பிறகு வரவு அளிக்கும். குறிப்பிட்ட ஒரு பயனர் சேர்த்துக்கொள்ளும் மொத்த பயனடைபவர் எண்ணிக்கை மீது வரம்பு ஏற்படுத்தலாம். (இ) வாலெட் வசதி ஆக்டிவேட் செய்யப்பட்ட மற்றும் / அல்லது பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் முழு கேஒய்சி (உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள்) செயல்பாட்டை முடித்துவிட வேண்டும். ஒருவேளை கேஒய்சி செயல்பாடு மேற்கொள்ளப்படவில்லை அல்லது இணக்க முறை நடவடிக்கைகள் முழுமையடையாமல் இருக்கும் பட்சத்தில், எஸ் பேங்க் தன்னிடம் வைத்திருக்கும் முழு உரிமை மற்றும் விருப்பத்தின்படி அது போன்ற வாலெட்டுகளை பயனருக்கு எந்த அறிவிப்பும் செய்யாமல், அதற்கான பொறுப்பு எதையும் எஸ் பேங்க் ஏற்காமல் வசதியை முடக்கி வைக்கும் அல்லது வசதியை முடித்துக்கொள்ளும். வாலெட் சம்பந்தப்பட்ட அனைத்து வரவுகள், பற்றுகள் அல்லது தொகை மாற்றங்கள் கேஒய்சி செயல்பாடுகளை எஸ் வங்கிக்குத் திருப்தி அளிக்கும் வகையில் செய்து முடித்த பிறகே வாலெட்டில் அனுமதிக்கப்படும். இது சம்பந்தமாக எஸ் பேங்க் எடுக்கும் முடிவுகள் இறுதியானவையாகவும் பயனரைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

6. இந்த வர்சுவல் கார்டு பயன்பாடுகள் வர்சுவல் கர்டு வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இவை www.yesbank.in இணையதளப் பக்கத்தில் கிடைக்கும், அவ்வப்போது புதுப்பிக்கப்படும், அவற்றில் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டிருக்கும், வர்சுவல் கார்டில் இருக்கும் இருப்பு வாலெட் இருப்பளவே இருக்கும்.

7. இந்த செயலி வழியாக பயனர் பெற்றுக்கொள்ளும் கிரடிட் கார்டு வசதிக்கு, பயனர் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்: (அ) பயனரிடம் செல்லுபடியாகும் எஸ் பேங்க் கிரடிட் கார்டு ஒன்று இருக்க வேண்டும், (ஆ) அவர் அந்த கிரடிட் கார்டு விபரங்களை செயலியில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பதை பயனர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்.

8. இந்த செயலி வழியாக பயனர் டிராவல் கார்டு வசதியைப் பெற, பயனர் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்: (அ) பயனரிடம் செல்லுபடியாகும் டிராவல் கார்டு ஒன்று இருக்க வேண்டும், (ஆ) அவர் அந்த டிராவல் கார்டு விபரங்களை செயலியில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பதை பயனர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்.

9. எஸ் பேங்க் வழங்கும் வசதிகளைப் பெற கீழே கொடுத்திருப்பவைகளை பயனர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்: (எ) இந்த செயலி பயனரின் சோஷியல் ஃபுரொஃபைலை அணுகி நண்பர்கள் பட்டியல், மொபைல் நம்பர் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளைப் பெற்று, பயனரின் பிரத்தியேக வேண்டுகோளின்படி அவர்களையும் செயலியில் பங்கேற்கும்படி கேட்டுக்கொள்ளும்; (பி) பயனரின் சோஷியல் புரொஃபைல், மொபைல் நம்பர் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு செயலி செய்தியை அனுப்பும்; (சி) பயனர் அவர் தம் வங்கி

கணக்குகள் விபரத்தை செயலியில் சேர்க்கலாம் (டி) எஸ் பேங்கின் தனிப்பட்ட விருப்பத்தின் படி அது நிர்ணயிக்கும் காலம் மற்றும் நேரம் வரையில் பயனரின் எஸ் பேங்க் அல்லது மற்ற வங்கி கணக்கு விபரங்களை எஸ் பேங்க் அதன் சர்வர் டேட்டாபேஸில் சேமித்து வைத்துக்கொள்ளும்; (இ1) எஸ் பேங்க் வழங்கியிருக்கும் வசதிகளைப் பயன்படுத்தி தொகை மாற்றங்களைச் செய்ய பயனர் எஸ் பேங்க் அனுமதித்திருக்கும் வரம்புக்கு உட்பட்டு நடந்துகொள்ள வேண்டும்.

10. இந்த வசதிகளைப் பயன்படுத்தி எஸ் பேங்கிற்கு பயனர் அனுப்பிவைக்கும் குறிப்புகள் ஓடிபி/ பாஸ்கோடு/ பாஸ்வேர்டு மூலம் சரிபார்க்கப்பட்ட பிறகே அவை செயல்படுத்தப்படும் என்பதை பயனர் உறுதி செய்கிறார்.

11. ஒரு நடவடிக்கை செய்து முடிந்த பிறகு, பயனர் கொடுக்கும் பணப்பட்டுவாடா நிறுத்தல் கோரிக்கைகளை எஸ் பேங்க் ஏற்றுக்கொள்ள இயலாது மற்றும் / அல்லது நிறைவேற்ற இயலாது என்பதை பயனர் ஏற்றுக்கொண்டு உறுதிபடுத்துகிறார்.

12. ஒரு குறிப்பிட்ட விபிஏ ஒதுக்கப்படுவது, அந்த விபிஏ கிடைப்பதைப் பொருத்திருக்கும் என்பதையும், இது எஸ் பேங்கின் தனிப்பட்ட விருப்பத்தைப் பொருத்திருக்கும் என்பதையும் பயனர் ஏற்றுக்கொண்டு அதை உறுதிபடுத்துகிறார். விபிஏ எதுவும் டூப்ளிகேட் ஆகாது என்றும் அல்லது ஒரு விபிஏ வை பல பயனர்களுக்கிடையில் ஒதுக்கப்படுவதில்லை என்ற எஸ் பேங்கின் நிலைப்பாட்டை பயனர் புரிந்து கொண்டிருக்கிறார்.

13. இந்த வசதிகளைப் பயன்படுத்தும்போது பயனர் இவற்றைக் கவனத்தில் வைத்துக்கொள்வார்: (i) பயனர் இந்த வசதிகளை அணுகி பயன்படுத்த இயலும்; (ii) இந்த வசதிகள் சம்பந்தப்பட்ட பொருந்தும் இந்திய சட்ட விதிகளுக்கும் விதிமுறைகளுக்கும் பயனர் இணங்கி நடந்து கொள்கிறார்; (iii) இந்த வசதிகளைப் பயன்படுத்த எஸ் பேங்கிற்குத் தேவைப்படும் அனைத்து விவரங்கள் மற்றும்/அல்லது ஆதாரங்களை பயனர் எஸ் பேங்கிற்கு அளித்திருக்கிறார்; (iv) எஸ் பேங்கில் அல்லது வேறு வங்கிகளில் பயனர் பராமரித்துக் கொண்டிருக்கும் கணக்கு விபரங்கள், எஸ் பேங்க் அவ்வப்போது ஒதுக்கிக் கொடுக்கும் கணக்கு எண், பாஸ்வெர்டுகள் உள்ளிட்டவை, வேறு மூன்றாம் நபரிடம் பகிர்ந்துகொள்ள மாட்டார்.

14. இந்த வசதிகளை வழங்குவதில் எஸ் பேங்க் வெறும் உதவி புரிபவராக மட்டுமே செயல்படும், இந்த வசதிகளுக்கு எந்த வாரண்டி அல்லது பொறுப்பு சார்ந்த உரிமைகளைக் கேட்பதில்லை மற்றும் மூன்றாம் நபரான வியாபாரிகளின் நிலைமை அல்லது நற்பெயர் குறித்து எவ்விதமான சிபாரிசுகளையும் எஸ் பேங்க் செய்வதில்லை என்பதை பயனர் புரிந்து கொண்டு அதற்குச் சம்மதிக்கிறார்.

15. எஸ் பேங்க் வழங்கும் வசதிகள் சம்பந்தப்பட்ட ஒரு அல்லது அனைத்து கட்டணங்கள் எஸ் பேங்கின் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் இருக்கும் என்பதை பயனர் புரிந்து கொண்டு அதற்குச் சம்மதிக்கிறார். பயனருக்கு எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காமல் எஸ் பேங்க் அவ்வப்போது அவைகளை மாற்றவும், முடித்துக்கொள்ளவும் அல்லது திருத்தவும் எஸ் பேங்க் சுதந்திரமான உரிமை பெற்றிருக்கும்.

16. எந்த ஒரு காரணத்திற்காகவும் பயனரின் வங்கிக் கணக்கு முடித்துக்கொள்ளப்பட்டால் அல்லது முடக்கி வைக்கப்பட்டால், அது பயன்பாடு அல்லது வசதிகளைப் பயன்படுத்தும் தொடர்புடையதாகவும் இருக்கலாம், இப் பிரச்சினையை பயனர் நேரடியாக அவர் தம் வங்கியுடன் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும், இதன் பொருட்டு எஸ் பேங்கை பொறுப்பாக்கக் கூடாது அதற்கு எஸ் பேங்க் பொறுப்பேற்காது என்பதை பயனர் புரிந்துகொண்டு அதற்குச் சம்மதிக்கிறார். இந்த செயலி பயனருக்கு வட்டியில்லாமல் எஸ் பேங்க் வழங்கும் ஒரு வசதி

என்பதால், எஸ் பேங்க் பயனருக்குத் திருப்பிக் கொடுக்கும் பணத்திற்கு எந்த வட்டியும் அளிக்கப்படமாட்டாது, அத் தொகையில் வட்டி எதுவும் சேர்க்கப்பட்டிருக்காது.

17. பயனர் இவற்றைப் புரிந்துகொண்டு சம்மதிக்கிறார்: (i) பயனர் பராமரித்துக் கொண்டிருக்கும் வசதி அல்லது எஸ் பே வாலெட்-ல் இருக்கும் இருப்பு தொகைக்கு எஸ் பேங்க் வட்டி எதுவும் வழங்காது; (ii) இந்த செயலி குறித்து பயனர் சிபாரிசு செய்வதற்கு எஸ் பேங்க் ஊக்கத் தொகை அல்லது அதற்குப் பதிலானது எதையும் எஸ் பேங்க் வழங்காது அது போலவே இந்த சிபாரிசுகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எதற்கும் எஸ் பேங்க் பொறுப்பேற்காது; (iii) அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கும் அனைத்து நடவடிக்கைகளும் கெடு தேதி அன்று இந்திய நேரம் காலை 12 மணிக்கு, கணக்கில் போதிய இருப்பு இருக்கும் பட்சத்தில், நிறைவேற்றப்படும்.

18. ஒருவேளை பயனர் செயலியில் தொகையை நிரப்ப எஸ் பேங்க் தெரிவித்திருக்கும் வழிமுறைகளுக்கு முரணான ஒன்றை மேற்கொண்டால், செயலியில் தொகை அல்லது தொகைகள் சேர்க்கப்படாது, அத் தொகைகளை எஸ் பேங்க் பெற்ற தேதியிலிருந்து அடுத்த 21 வேலை நாட்களில் திருப்பிச் செலுத்தப்படும் என்பதை பயனர் புரிந்து கொண்டு அதற்குச் சம்மதிக்கிறார்.

19. ஒழுங்குமுறை ஆணையங்கள் அல்லது அரசு பயனர் பெயரை தடைசெய்யப்பட்ட அட்டவணையில் சேர்த்திருந்தால், இச் செயலி வசதியை முடித்துகொள்வது அல்லது தடுத்து நிறுத்துவது உட்பட்ட ஆனால் இதுவே இறுதியான நடவடிக்கையாக இருக்காதவாறு உரிய நடவடிக்கைகளை எஸ் பேங்க் கருதுவதுபோல பயனருக்கு எதிராக மேற்கொள்ளும் என்பதை பயனர் புரிந்து கொண்டு அதற்குச் சம்மதிக்கிறார்.

20. வாலெட்டைப் பயன்படுத்தி பயனர் ஒருவேளை நிதி சார்ந்த நடவடிக்கைகளை ஒரு (01) வருட காலத்தில் மேற்கொள்ளவில்லை என்றால், பயனரின் வாலெட்டில் (தொகை சேர்ப்பது போன்ற) அனைத்து நிதி சார்ந்த நடவடிக்கைகள் எஸ் வங்கியின் சுய விருப்பத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்தி வைக்கப்படும். வங்கி அவ்வப்போது விளக்கும் சிரத்தையுடன் கூடிய உயரிய முயற்சிகள் எடுத்து உறுதிப்படுத்திய பிறகே வாலெட் செயல்பட வைக்கப்படும். எஸ் பேங்க் வழங்கியிருக்கும் செயலியில் பயனர் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பயனர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஒருவேளை பயனர் இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாகச் செயல்பட்டால் அல்லது பயனரின் மரணம், நிதிநிலைமை நொடிப்பு அல்லது சட்டரீதியாக செயல்படவியலாத நிலைமை எஸ் பேங்கிற்குத் தெரியவரும்போது அல்லது எந்த ஒரு காரணத்திற்காகவும் எப்பொழுது வேண்டுமானாலும் எவ்விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் பயனர் இச் செயலி பயன்படுத்துவதை எஸ் பேங்க் திரும்ப எடுத்துக்கொள்ள அல்லது முடித்துக்கொள்ள முடியும் என்பதை பயனர் புரிந்துகொண்டு அதை உறுதிப்படுத்துகிறார்.

21. இச் செயலியின் மூலமாக எஸ் பேங்க் வழங்கும் வசதிகளை நேரடியாக அல்லது வங்கியுடன் பணிபுரிகிறவர்கள், பிரதிநிதிகள், முகவர்கள் அல்லது ஒப்பந்தம் மூலமாக அதன் சார்பில் சேவை அளிப்பவர்கள் மூலம் வழங்க முடியும் என்பதை பயனர் புரிந்துகொண்டு அதை உறுதிப்படுத்துகிறார்.

22. இந்த வசதிகள் சம்பந்தமாக எஸ் பேங்கிற்கு பயனர் அளித்திருக்கும் அல்லது தெரியப்படுத்தியிருக்கும் விவரங்களில் முறைகேடுகள், முரணானவை அல்லது பொருந்தாதவை எதுவும் ஒருவேளை தெரியவந்தால், அது சம்பந்தமான அனைத்து கடமைகள், பொறுப்புகள் மற்றும் விளைவுகள் முழுவதும் பயனரைச் சார்ந்ததாக இருக்கும் என்பதை பயனர் புரிந்துகொண்டு சம்மதித்து உறுதிப்படுத்துகிறார். இந்த வசதிகள் சம்பந்தப்பட்ட

துல்லியமான முழு விவரங்களை அனைத்து சமயங்களிலும் எஸ் பேங்கிற்கு அளிக்க பயனர் புரிந்துகொண்டு சம்மதித்து அதை உறுதிப்படுத்துகிறார். எஸ் பேங்கிற்குப் பயனர் அளித்திருக்கும் விவரங்களில் ஏதேனும் தவறு அல்லது முரண்பாடு இருப்பதாக பயனர் கருதினால், அதைப் பற்றி எஸ் பேங்கிற்கு பயனர் உடனே தெரிவிப்பார். பயனரிடமிருந்து இந்த விசயம் தெரிய வந்ததும், எஸ் பேங்க் அத் தவறை சரிசெய்யும் முயற்சிகளை எங்கெல்லாம் சாத்தியமுள்ளதோ அவற்றிற்கு உரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்.

**எச். முடித்துக்கொள்ளுதல்:**

1. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக பயனர் ஒருவேளை செயல்பட்டால் அல்லது பயனரின் மரணம், நிதிநிலைமை நொடிப்பு அல்லது சட்டரீதியாக செயல்பட இயலாத நிலைமை எஸ் பேங்கிற்குத் தெரியவரும்போது, எவ்விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் பயனர் இச் செயலி பயன்படுத்துவதை எஸ் பேங்க், அதன் சொந்த விருப்பத்தின்படி, தற்காலிகமாக இந்த வசதியை திரும்பப் பெற்றுக்கொள்ளும் அல்லது இந்த வசதிகளை முழுமையாக அல்லது பகுதியாக எப்பொழுது வேண்டுமானாலும் முடித்துக்கொள்ளும்.

2. செயலி மூடப்படும்போது வசதிகளும் தானாக முடிவுக்கு வந்துவிடும் என்பதை பயனர் புர்ந்துகொண்டு அதை ஏற்றுக்கொள்கிறார். பயனரும் தானாகவே முன்வந்து செயலி பயன்பாட்டை முடித்துக்கொள்ள முடியும். ஒருவேளை பயனர் தானாகவே செயலி பயன்பாட்டை முடித்துக்கொள்ள விரும்பும்போது, வாலெட்டிலுள்ள இருப்பு சரிபார்க்கப்பட்ட (எஸ் பேங்க் சரிபார்த்தல் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும்) பயனரின் வங்கிக் கணக்கில் மட்டுமே வரவு வைக்கப்படும். பயனரின் வங்கிக் கணக்கு விபரங்களை (கணக்கு எண் மற்றும் ஐஎஃப்எஸ்சி கோடு) அளித்து எஸ் பேங்கில் அல்லது வேறு இந்திய வங்கி ஒன்றில் பராமரிக்கப்படும் கணக்கை எஸ் பேங்க் சரிபார்க்க உதவ பயனர் நிபந்தனைகள் இல்லாமல் சம்மதிக்கிறார்.

3. செயலி ஏற்பாட்டை முடித்துக்கொள்ள பயனர் கோரிக்கை செய்யும்போது, எஸ் பேங்க் ஒரு குறிப்பிட்ட தொகையை *(வங்கியில் சொந்த விருப்பத்தின்படி இந்த தொகை முடிவு செய்யப்பட்டு பயனரின் கோரிக்கை வந்தவுடன் அவருக்கு தெரிவிக்கப்படும்)* கழித்துக்கொள்ள உரிமை பெற்றிருக்கும் என்பதையும் மீதமுள்ள தொகையை மட்டுமே பயனரின் வங்கிக் கணக்கில் தொகை வரவு வைக்கப்படும் என்பதையும் பயனர் புரிந்துகொண்டு அதை உறுதிபடுத்துகிறார். பயனரின் வங்கிக் கணக்கில் மீதமுள்ள தொகையைச் செலுத்தும் மற்றும் /அல்லது தொகை மாற்றம் செய்யும் முன்னர் எஸ் பேங்க் பயனரின் வங்கிக் கணக்கைச் சரிபார்க்கும் செயல்பாட்டிற்கு பயனர் நிபந்தனைகள் இல்லாமல் மற்றும் மாற்றவியலாத வகையில் சம்மதமளித்து இந்த ஏற்பாட்டிற்குக் கட்டுப்படவும் இணங்குகிறார்.

4. பொருந்தும் சட்டம் அல்லது விதிமுறைகளில் கொடுத்திருப்பதைத் தவிர்த்து, எஸ் பேங்க் இந்த வசதிகளை முடித்துக்கொள்ள மற்றும் /அல்லது இந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட நடவடிக்கைகளை விரிவுபடுத்த, நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ள அல்லது நிறுத்தி வைக்க மற்றும் இந்த வசதிகளுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கை வரம்புகள் மற்றும் செயல்பாடுகளை பாதுகாப்பு காரணங்களுக்காக எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றும் உரிமையை எஸ் பேங்க் தன்னிடம் தக்கவைத்துக் கொள்கிறது.

5. பயனருக்கு எந்த காரணத்தையும் தெரிவிக்காமல் மற்றும் எந்த முன்னறிவிப்பும் செய்யாமல் இந்த வசதிகளை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ எப்பொழுது வேண்டுமானாலும் தன் சுய விருப்பத்தின்படி தற்காலிகமாக நிறுத்திக் கொள்ளும் உரிமையை எஸ் பேங்க் தன்னிடம் தக்க வைத்துக்கொள்கிறது

6. எஸ் பேங்க், எப்பொழுது வேண்டுமானாலும் செயலி பராமரிப்பு அல்லது பழுதை சரிசெய்யும் தேவைக்காக அல்லது அவசரநிலைமைக் காலத்தில் அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக வசதி அளிப்பதை தற்காலிகமாக அல்லது முடிவாக நிறுத்திக்கொள்ள தேவைப்படும் போது அதை மேற்கொள்ள எஸ் பேங்க் உரிமை பெற்றிருக்கும்.

**ஐ. இழப்புறுதி:**

1. பயனருக்கு வசதிகளை அளிக்க எஸ் பேங்க் சம்மதித்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில், பயனர் அவர் தம் சொந்த செலவில் மாற்றவியலாத வகையில் மற்றும் நிபந்தனைகளற்று எஸ் பேங்க், அதன் இயக்குனர்கள், அதிகாரிகள், உரிமையாளர்கள், முகவர்கள், கோ-பிராண்டர்கள் அல்லது இதர பிற பார்ட்னர்கள், பணியாளர்கள், தகவல் அளிப்பவர்கள், உரிமம் வழங்குநர்கள், உரிமதாரர்கள், ஆலோசகர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மூன்றாம் தரப்பினர் (கூட்டாக ''இழப்புறுதி வழங்கப்பட்டவர்கள்'') அனைவருக்கும் ஏதாவது மற்றும் அனைத்து இழப்புகள், சேதங்கள், கேட்புரிமைகள், கோரிக்கைகள், செயல் காரணங்கள், கடன் அல்லது பொறுப்புகள் மற்றும் நியாயமான வழக்கறிஞர் கட்டணங்கள், செலவழித்த கட்டணங்கள் அல்லது இழப்புறுதி வழங்கப்பட்டவர்கள் செலவழிக்கவிருக்கும் கட்டணங்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவையாக இருப்பவை அனைத்திற்கும் பயனர் பொறுப்பேற்று இழப்புறுதி வழங்க, எதிர்வழக்காட மற்றும் இழப்புறுதி வழங்கப்பட்டவர்களுக்குத் தீங்கு விழையாமல் பாதுகாப்பார்: (i) இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் எஸ் பேங்க் வகுத்திருக்கும் மற்றும் அவ்வப்போது குறிப்பிடும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை பயனர் மீறாமல் செயல்படுவார்; (ii) பயனர் பயன்படுத்தும் வசதிகள் மற்றும் அது சம்பந்தப்பட்டவைகளிலிருந்து பயனரின் நடவடிக்கைகள் அல்லது விடுதல்கள் காரணமாக இழப்புறுதி வழங்கப்பட்டவர்களுக்கு எதிராக விளையும் கேட்புரிமைகள், கோரிக்கைகள், பிரச்சினைகள் அல்லது வழக்குகள்; மற்றும் (iii) பயனரின் கவனக்குறைவு அல்லது விதிமீறல்கள் அல்லது ஏதாவது சட்ட விதிகள் அல்லது மூன்றாம் நபரின் உரிமைமீறல்களாகக் குற்றம்சாட்டப்பட்டவை போன்ற பயனர் கடைபிடிக்கத் தவறிய நெறிகள்.
2. ஒருவேளை எஸ் பேங்க் இந்த வசதிகளை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விலக்கிக் கொண்டாலும், இந்த இழப்புறுதி செல்லுபடியாகும் விதத்தில் மற்றும் காலாவதி ஆகாமல் பயனரைப் பிணைத்திருக்கும் என்று பயனர் சம்மதித்து அதை உறுதிப்படுத்துகிறார்
3. இந்த இழப்புறுதி தொடர்ந்து செல்லுபடியாகும் ஒன்றாக ஒருவேளை இந்த வசதிகள் கெடுமுடிந்து மற்றும் விலகிக்கொள்ளப்படும்போதும் பயனரைப் பிணைத்திருக்கும் என்று பயனர் சம்மதித்து அதை உறுதிப்படுத்துகிறார்.
4. இழப்புறுதி வழங்கப்பட்டவர்களுக்கு இழப்புறுதி வழங்கப்பட்டவர்கள் இழப்பு, செலவினங்கள் மற்றும் கேட்புரிமைகள் அல்லது செலவழித்த தொகைகளுக்குப் போதுமானது என்று கருதும் தொகையை, ஒருவேளை அவை உண்மையில் நிகழாமல் இருக்கலாம் என்றாலும் நிழக ஏதுவாக இருந்தால் அதைப் பயனர் செலுத்த சம்மதித்து அதை உறுதிப்படுத்துகிறார்.

**ஜே. இரகசியத்தன்மை:**

1. பொருந்தும் சட்ட விதிகள் தடுத்து நிறுத்தாத அளவில், பயனர் சம்பந்தப்பட்ட இரகசிய விபரங்கள் மற்றும் எஸ் பேங்கிற்கு பயனர் அளித்திருக்கும் பிற விவரங்களை எஸ் பேங்க் அதன் கிளைகள், பிரதிநிதி அலுவலகங்கள், துணை நிறுவனங்கள், பிரதிநிதிகள், தணிக்கையாளர்கள் மற்றும் எஸ் பேங்க் தேர்ந்தெடுக்கும் மூன்றாம் நபர்கள் அவை எந்த இடங்களில் இருந்தாலும் அவர்களுடன் எஸ் பேங்க் பகிர்ந்துகொள்ள உரிமை பெற்றிருக்கும்.
2. எஸ் பேங்கின் பொறுப்பிலிருக்கும் மற்றும் அதற்குத் தெரிந்திருக்கும் பயனர் சம்பந்தப்பட்ட ஒரு விவரத்தை அல்லது அனைத்து விவரங்களை இதர பிற வங்கி அல்லது சங்கம் அல்லது நிதி

நிறுவனம் அல்லது வேறு அமைப்புகளுக்கு, எஸ் பேங்க் சரி என்று கருதுவது போல் எப்பொழுது வேண்டுமானாலும் தெரியப்படுத்த உரிமை பெற்றிருக்கும்.

3. பயனருக்கு எஸ் பேங்க் வழங்கியிருக்கும் இந்த வசதிகள் முடிவுக்கு வந்த பிறகு அல்லது முடித்துக்கொண்ட பிறகும் கூட இந்த ஷரத்து செல்லுபடியாகும்.

**கே. பொறுப்புதுறப்புகள்:**

1. கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் எந்த ஒரு அல்லது அனைத்து பொறுப்புகளிலிருந்து எஸ் பேங்க் விடுதலை பெற்றுவிடும்: (i) எஸ் பேங்க்-ன் கட்டுப்பாடுகளுக்கு வெளியிலிருக்கும் இதர பிற காரணங்கள் பொருட்டு அல்லது தேவைப்படும் பூகோள எல்லைக்குள் இல்லாது போதல் அல்லது இயற்கை பேரிடர்கள் அல்லது ஏதாவது சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் அல்லது டெலிகம்யூனிகேஷன் நெட்வொர்க்கில் நிகழும் கோளாறுகள் உள்ளிட்ட இதர பிற காரணங்கள் உள்ளிட்ட ஆனால் அது மட்டுமே அல்லாத *force majeure* நிபந்தனைகள் காரணமாக பயனர் இந்த வசதிகளைப் பெற தவறும்போது; (ii) மேலே சொல்லப்பட்ட காரணங்கள் காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக பயனருக்கு அல்லது வேறு மூன்றாம் நபருக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பு காரணமான அனைத்து வகை பொறுப்புகள்; (iii) பரிசீலனை சமயத்தில் அல்லது டிரான்ஸ்மிஷன் அல்லது மற்ற அனுமதிக்கப்படாத யாரேனும் இரகசிய விவரங்களை அணுகுதல் காரணமாக விளையும் இழப்புகள் ஏதாவது இருந்தால்; (iv) வழங்கப்பட்ட வசதிகளை பாதிப்பது போன்ற சேவை அளிப்பவர்களின் பிழைகள் அல்லது தவறுதல்கள்.

2. வழங்கப்படும் சேவைகள் சம்பந்தப்பட்ட அல்லது அதிலிருந்து விழையும் சேவை அளிப்பவர்கள் அல்லது மூன்றாம் நபர் வழங்கும் சேவைகளின் தரம் குறித்த வாரன்டி எதுவும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ எஸ் பேங்க் வழங்கவில்லை.

3. இச் செயலி மூலமாக பயனர் எஸ் பேங்கிடம் செய்துகொள்ளும் புதிய கிரடிட் கார்டு அல்லது டிராவல் கார்டு கோரிக்கைகள் எஸ் பேங்கின் சுய விருப்பத்தின் படி பரிசீலிக்கப்படும். பயனர் அவருக்குத் தேவை என்று ஒரு புதிய கிரடிட் கார்டு அல்லது டிராவல் கார்டுக்கு விண்ணப்பம் செய்து கொள்வதால் மட்டுமே அதை எஸ் பேங்க் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று பொருள் அல்ல என்பதை பயனர் புரிந்து கொண்டு அதை உறுதி செய்கிறார். பயனர் செய்துகொண்டிருக்கும் கோரிக்கை கிரடிட் கார்டு மற்றும் டிராவல் கார்டு வழங்கலுக்காக எஸ் பேங்க் வகுத்திருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு அவை பரிசீலிக்கப்படும்.

4. இந்த வசதிகளைப் பயன்படுத்தி செயலி மூலமாக அனுப்பப்படும் சொந்த அல்லது மற்ற செய்திகள் அல்லது அறிவிப்புகள் இரகசியமாக அல்லது பாதுகாப்பாக இருக்கும் என்பதற்கு எஸ் பேங்க் எந்த உத்தரவாதமும் வழங்கவில்லை.

5. சிஸ்டம் அல்லது நெட்வொர்க் அல்லது அவற்றின் செயல்பாடுகள் அல்லது இந்த செயலி சம்பந்தப்பட்ட அல்லது அதனால் பயனருக்கு அல்லது வேறு ஒருவருக்கு விளையும் ஏதாவது இழப்பு அல்லது சேதம் அது எப்பொழுது நிகழ்ந்தாலும் அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதற்கு எந்த பொறுப்பையும், எப்படிப்பட்ட பிரதிநிதித்துவத்தையும் ஏற்பதாக உத்தரவாதம் எதையும் எஸ் பேங்க் வழங்கவில்லை.

6. எஸ் பேங்க் மற்றும்/அல்லது அதன் இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள், முகவர் அல்லது ஒப்பந்தக்காரர்கள் யாரும் கீழ்க்கண்டவைகளுக்குப் பொறுப்பேற்றவில்லை: எந்த ஒரு இழப்பு அல்லது சேதம் அது நேரடியாக, மறைமுகமாக அல்லது விளைவாக, இனி கூறப்படுபவை உள்ளிட்டு ஆனால் அது மட்டுமே அல்லாத வருவாய், இலாபம், வர்த்தகம், ஒப்பந்தங்கள், எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புகள் இழப்பு அல்லது நற்பெயர் இழப்பு, மென்பொருள் உள்ளிட்ட பயன்பாடு அல்லது ஒரு கருவியின் மதிப்பு இழப்பு, எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தாலும்

இல்லாவிட்டாலும், இவை பயனருக்கு அல்லது வேறு ஒருவருக்கு நிகழ்ந்திருந்தாலும் அது தாமதம், இடையூறு, தற்காலிக நிறுத்தம், ரெஸலூஷன் அல்லது எஸ் பேன்கின் பிழையாக கோரிக்கை பெறுவதில் மற்றும் பரிசீலிப்பதில் மற்றும் பதில்களைத் தயாரித்து அனுப்புவதில் அல்லது விபரங்கள் அல்லது செய்திகள் டிரான்ஸ்மிஷனில் ஏதாவது தவறு, தாமதம், இடையூறு, தற்காலிக நிறுத்தம், கட்டுப்பாடு அல்லது பிழை அது பயனரின் டெலிகம்யூனிகேஷன் கருவியிலிருந்து மற்றும் சேவை அளிப்பவரின் நெட்வொர்கிலிருந்து மற்றும் எஸ் பேங்கின் சிஸ்டம் அல்லது பயனரின் டெலிகம்யூனிகேஷன் கருவி பழுதடைதல், இடையூறு, தற்காலிக நிறுத்தம் அல்லது செயல்படத் தவறுதல், எஸ் பேங்கின் சிஸ்டம் அல்லது சேவை அளிப்பவர்கள் ஒருவரின் நெட்வொர்க் மற்றும்/அல்லது மூன்றாம் நபர் அளிக்கும் அதுபோன்ற சேவை இந்த வசதிகளை அளிக்கத் தேவைப்படுவதுபோல்.

7. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு எதிரிடையாக இல்லாதவரையில், பயனருக்கும் செல்லுலர் சேவைகள் அளிப்பவர் அல்லது சேவை அளிக்கும் மூன்றாம் நபர் (அதற்காக எஸ் பேங்க் நியமித்திருந்தாலும் இல்லாவிட்டாலும்) இவர்களுக்கு இடையில் எழும் எந்த ஒரு பிரச்சினையிலும் எஸ் பேங்க் ஈடுபடாது அல்லது பயனருக்குக் கடமைபட்டிருக்காது.
8. பயனரின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டாக இந்த வசதியின் வழியாக அனுப்பப்படும் சொந்த அல்லது கணக்கு விவரங்களின் இரகசியத்தன்மை, இரகசியம் மற்றும் பாதுகாப்பிற்கு எஸ் பேங்கை பொறுப்பாக்க முடியாது.
9. டெலிகம்யூனிகேஷன் அல்லது எலக்ட்ரானிக் கிளியரிங் நெட்வொர்க் அமைப்பில் பங்கேற்பு, சட்ட ரீதியான அதிகாரத்தின்படி, புள்ளிவிவர பகுப்பாய்வு அல்லது கிரடிட் ரேட்டிங் நோக்கங்களுக்காக பயனரின் சொந்த விவரங்களை மேலே சொல்லப்பட்டவர்கள் உட்பட ஆனால் அவர்கள் மட்டுமே அல்லாமல் மூன்றாம் நபருடன் எஸ் பேங்க் பகிர்ந்து கொள்வதால் பயனருக்கு ஏதாவது இழப்பு நேர்ந்தால் அதற்கு எஸ் பேங்கை பொறுப்பாக்க முடியாது.

**எல். உள் ஒப்பந்தம் செய்தல்**

1. வசதிகளை வழங்கும் பொருட்டு ஒருவேளை எஸ் பேங்க் ஏதாவது ஒரு மூன்றாம் நபர் அல்லது தனியார் ஒருவருடன் எஸ் பேங்க் உள் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம், இதைப் பயனருக்கு முன்னறிவிக்க அல்லது தெரிவிக்க அல்லது அவரிடமிருந்து ஒப்புதல் பெறத் தேவையில்லை.
2. எஸ் பேங்க் மற்றும் உள் ஒப்பந்தக்காரர் அல்லது சேவை வழங்கும் தனிநபருக்கிடையில் ஏதோ ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பது போலவும், எஸ் பேங்க் இது போன்ற உள் ஒப்பந்தக்காரருக்கு அல்லது சேவை வழங்கும் தனிநபருக்கு தொகை பட்டுவாடா அல்லது அவரிடமிருந்து தொகை பெற வேண்டியிருப்பது போலவும் இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடங்கியிருப்பவை எதையும் புரிந்துகொள்ளக் கூடாது.

**எம். பிரிக்கப்படும் தன்மை**

1. தகுதியுள்ள அதிகாரவரம்புள்ள ஒரு நீதிமன்றம் இதில் அடங்கியிருக்கும் ஒரு வரையறை அல்லது ஷரத்து செல்லாது என்று அறிவித்தால், இந்த கொள்முதல் ஆவணத்திலிருக்கும் மீதிமுள்ள வரையறைகள் மற்றும் ஷரத்துகள் பாதிக்கப்படாமலும் முழுமையாகச் செயல்படும் விதமாகவும் இருக்கும்

**என். பயனடையும் மூன்றாம் தரப்பினர்**

1. இந்த ஆவணத்தில் தனியாகக் குறிப்பிட்டிருப்பவை தவித்து, இதிலிருப்பவை பயனரைத் தவிர்த்த யாருக்கும் அல்லது எந்த ஒரு அமைப்புக்கும் எந்த உரிமைகளையும் வழங்குவதாகப் பொருள்படாது.

**ஒ. கட்டணங்களும் வாடிக்கையாளருக்கு ஆதரவும்**

1. எஸ் பே வாலெட்டிலிருந்து எந்த ஒரு வங்கிக் கணக்கிலும் பயனர் தொகை மாற்றம் செய்யும் போது பயனரிடமிருந்து எஸ் பேங்க் கட்டணங்களை வசூலிக்கும். தொகை மாற்றம் செய்யப்படும் மதிப்பில் 2.5% அளவில் கட்டணம் இருக்கும். பயனரிடம் வசூலிக்கும் தொகையை மாற்றியமைக்கும் உரிமையை எஸ் பேங்க் தன்னிடம் தக்க வைத்துக் கொள்கிறது.
2. எஸ் பே வாலெட் குறித்த அதிக விபரங்களுக்கு பயனர்கள் www.yesbank.in இணையதளத்தை அல்லது yespay.co.in பார்க்கவும்.
3. பயனர் தங்கள் கேள்விகளை / குற்றச்சாட்டுகளை எஸ் பேங்கிற்குத் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 2000-ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது yestouch@yesbank.in முகவரியில் மின்னஞ்சல் அனுப்பலாம்.
4. பிரச்சினைக்கு அளிக்கப்பட்ட தீர்வுகள் உங்கள் எதிர்பார்ப்புக்கு இணையாக இல்லாத பட்சத்தில், head.grievanceredressal@yesbank.in முகவரியில் குறைதீர்ப்பு அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம். குறைதீர்ப்பு அதிகாரி அளித்த தீர்வு ஒருவேளை திருப்திகரமாக இல்லாத பட்சத்தில், நீங்கள் உங்கள் குற்றச்சாட்டை முக்கிய வழிகாட்டும் அதிகாரியிடம் principal.nodalofficer@yesbank.in முகவரியில் எடுத்துச் செல்லலாம்.
5. இந்திய ரிசர்வ் வங்கியின் பேங்கிங் ஓம்பட்ஸ்மேன் ஸ்கீம், 2006 திட்டத்தில் எஸ் பேங்க் இணைத்திருக்கிறது என்று இதன் மூலம் பயனருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இத் திட்டத்தின் கீழ், வங்கிக்கு எதிரான குறைபாடுகள் ஏதாவது இருந்தால், அது 30 நாட்களுக்குள் வங்கியால் பரிசீலிக்கப்படவில்லை என்றால், குற்றச்சாட்டை நீங்கள் அந்தந்த நகரத்திலிருக்கும் பேங்கிங் ஓம்பட்ஸ்மேன் கவனத்திற்கு எடுத்துச் செல்லலாம். தொடர்பு விவரங்களுக்கு கீழேயுள்ள தத்தலைப் பயன்படுத்தவும்: https://www.rbi.org.in/Scripts/bs_viewcontent.aspx?Id=164

**பி. ஆளுமைச் சட்டம் மற்றும் அதிகார வரம்பு:**

1. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து வரையறைகள் மற்றும் நிபந்தனைகளும், எஸ் பேங்க் அவ்வப்போது மேற்கொள்ளும் திருத்தங்களும் மாற்றங்களும் இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் சட்டங்களுக்கு உட்பட்டிருக்கும், பிரச்சினைகளும் இதன் அடிப்படையிலேயே பரிசீலிக்கப்படும்.
2. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், எஸ் பேங்க் அவ்வப்போது மேற்கொள்ளும் திருத்தங்கள், மாற்றங்கள் சம்பந்தப்பட்ட மீறல்கள், முடித்தல் அல்லது செல்லுபடித் தன்மை அனைத்தும் மும்பை நீதிமன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும்.

**மேலேயுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் உட்கிடைகளைப் பயனர் படித்து புரிந்து கொண்டு, தன் சுதந்திர சிந்தனையுடன் விருப்பப்பட்டு தகவலறிந்த சம்மதமளித்து இந்த செயலி மூலமாகக் கிடைக்கும் வசதிகளைப் பெற்றுக் கொள்கிறார்.**